<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>
**<u>HMOP. No.30/2024</u>**

ம.சா.1 தேதி.  24.10.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் | த/பெ. | தங்கவேல் |
| வயது | 56 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.  அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.  அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 10.11.1999 அன்று நடந்த திருமணத்திற்கு அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழ் அசல் **ம.சா.ஆ.1** ஆகவும்,  எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.2** ஆகவும், வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.3** ஆகவும், மனுதாரர் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் **ம.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.  மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.